அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு 2024

## தமிழ் - ஆண்டு 6

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

வேலனும் குமரனும் உண்மை பேசும் நற்பண்பு கொண்டவர்கள். அவர்களது அப்பா பழக்கடை வைத்திருக்கிறார். பள்ளி விடுமுறையில் ஒரு நாள் இருவரும் பழங்களை அடுக்கி வைக்கும்போது, ஒரு பழுதடைந்த பப்பாளிப் பழத்தைக் கண்டெடுத்து ஓரமாக வைத்தனர். அவர்கள் உணவு உண்பதற்காக வீட்டுக்குச் சென்று திரும்பி வந்து பார்த்தபோது, பழுதடைந்த பப்பாளிப்பழத்தைக் காணவில்லை. அப்பா அதை ஒரு பாட்டி வாங்கிச் சென்றதாகக் கூறினார். உடனே ஒரு நல்ல பப்பாளிப்பழத்தை எடுத்துக் கொண்டு பாட்டியின் வீட்டுக்குச் சென்றனர். அதைப் பாட்டியிடம் கொடுத்துவிட்டு மகிழ்வுடன் திரும்பினர்.